Montreal Irusu
இருசு
இலவசம் FREE Issue
பக்கங்கள்: 24 Friday / March 16, 2018 24 Pages

"இலங்கை அரசு சர்வதேச நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்..."

சிறுபான்மை மக்களுக்கு எதிரான தொடர்ச்சியாக சம்பவங்கள் சர்வதேச ரீதியில் அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது...

இனவாத செயற்பாடுகளை தடுக்க சட்டம் ஒழுங்கு ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அண்மைக் காலமாக இடம்பெறும் இனவாத செயற்பாடுகள் மிகவும் கண்டிக்கத் தக்கவை. அம்பாறை சம்பவம் தொடர்பில் சந்தேகம் உள்ளது. பொலிஸ் நிலையம் அருகில் இருந்த நிலையில் தாக்க வந்தவர்கள் பொலிஸாரின் காதினால் புகுந்து தப்பியுள்ளனர். இதன் பின்னணியில் உள்ள உண்மைத் நிலையை ஆராய வேண்டும். இளைஞர் ஒருவர் மீதான தாக்குதலை அடிப்படையாக வைத்து கண்டியில் வன்முறை இடம்பெற்றுள்ளது. பள்ளிவாசல்கள், வீடுகள் தாக்கப்பட்டன. உடைமைகள் வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.



இவற்றை அனுமதிக்க முடியாது. மக்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்படவில்லை.

சட்டத்தில் இருந்து தப்புவதற்காக வீடுகளை தீ வைத்து சேதம் செய்வது மோசமான நிலைமையை ஏற்படுத்தும். சம்பவம் நடந்து முடிந்த பின்னர் நடவடிக்கை எடுப்பதில் பயனில்லை. சட்டத்தை கையிலெடுத்து செயற்பட முடியும் என்று மக்கள் கருதுகின்றனரா. இந்த தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது. சகல இனத்தினருக்கும் சம உரிமையுள்ளது. சட்டம் சமமாக செயற்படுத்தப்படவேண்டும். தாம் சிரேஷ்ட இனம் என யாராவது கருதி செயற்படுவார்களானால் அதற்கு இடமளிக்க முடியாது. கண்டியில் அமைச்சர்கள் மூன்று, நான்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஏன் அவர்களால் செயற்பட முடியவில்லை.

கடந்த காலங்களில் இலங்கையில் இவ்வாறான ஒரு இன ரீதியான அடக்குமுறைகள் இடம்பெற்றன. இவ்வாறான நிலையில் தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போது இனவாத செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது. சட்டம், நீதி எம்மை எதுவும் செய்யாது என்ற நிலைப்பாட்டில் இனவாத குழுக்கள் தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுவார்கள். ஆகவே குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த பிரச்சினைக்கு முழுமையான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் இந்த அரசாங்கம் எதன் அடிப்படையில் சட்டம் ஒழுங்கை கையாள்கின்றது என்ற கேள்வி எம்மத்தியில் எழுகின்றது.

சிலர் தாங்கள் தான் உயர்ந்தவர்கள் என நினைத்து கொண்டு ஏனையவர்களை எம்மைவிட பின்னோக்கி இருந்த நாடுகள் அனைத்தும் எம்மை விடவும் அபிவிருத்தி கண்டு நாட்டின் வளர்ச்சியில் முக்கியத்துவம் செலுத்துகின்றன. நாம் இன்றும் இனவாத செயற்பாடுகளில் மூழ்கி செயற்படுவது தடுக்கப்படவேண்டும். பிரதமர் இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சட்டத்தை கையிலெடுத்து செயற்படும் நிலைமை ஏற்பட அரசாங்கம் இடமளிக்கக் கூடாது. நல்லாட்சியில் இனவாதம் தூண்டப்படுவதை ஒருபோதும் பொறுத்துக் கொள்ளவும் முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தண்டனை கிடைக்காது என்ற நம்பிக்கையே வன்முறைகளுக்குக் காரணம்

திகன சம்பவம் இலங்கை வரலாற்றில் ஒரு அங்கமாகவே இருந்து வந்துள்ளது. இவ்வாறான நிகழ்வுகள் இந்நாட்டிற்கு புதிய விடயமல்ல. 70 வருட சுதந்திர வரலாற்றில் சிறுபான்மையினருக்கு எதிரான



இத்தகைய சம்பவங்கள் நிறைந்துள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில், "திகன வன்முறைகளை அனுபவித்த அனைவருக்கும் மரணமடைந்த இருவரின் குடும்பங்களிற்கும் முதற்கண் எனது அனுதாபங்களை தெரிவிக்கிறேன். எனக்கு முன்பதாக பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் இது குறித்து ஏமாற்றத்தையும் வெறுப்பையும் எடுத்துரைத்திருந்தார். இச்சம்பவத்தை நம்ப முடியாமைக்கு தொ.பக்கம்: 07

< < < < < 'இருசு' அடுத்த இதழ் ஏப்ரல் 06இல் வெளிவரும். > > > > >

கனடா

பொருளாதாரம் வீழ்ச்சியடையும்

NAFTA எனப்படும் வட அமெரிக்க தடையற்ற வர்த்தக உடன்பாடு செயலிழக்குமாக இருந்தால், கனடாவின் பொருளாதாரம் 0.5 சதவீத வீழ்ச்சியைக் காணும் என கனடாவின் சிந்தனையாளர் சபை தெரிவித்துள்ளது. அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளுக்கிடையிலான குறித்த வர்த்தக உடன்பாடு, எதிர்வரும் கிழமைகளில் எட்டாவது சுற்று பேச்சுவார்த்தையினை எட்டவுள்ள நிலையில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேலும், கனடாவின் சிந்தனையாளர் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஏறக்குறைய 85,000 பேர் ஒரு ஆண்டுக்குள் வேலை இழக்கும் நிலை ஏற்படும். அத்துடன் யேுகுவுயு ஒப்பந்தத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், கனடாவின் பொருளாதாரத்தில் சில தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும் என்ற போதிலும், புதிதாக அமெரிக்காவின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் வரியற்ற வியாபாரங்கள் என்பவற்றுக்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தம் செயலிழக்குமாக இருந்தால், கனடாவின் ஏற்றுமதிகளில் 8.9 பில்லியன் வீழ்ச்சி ஏற்படும் எனவும், இது ஆண்டுக்கு 1.8 சதவீத வீழ்ச்சி எனவும், அதிகபட்சமாக வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் ஏற்றுமதியில் 6 பில்லியன் டொலர்கள் வீழச்சியடையும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கனடாவில் ஏற்படக் கூடிய பணவீக்க அதிகரிப்பு மற்றும் கனடிய டொலரின் பெறுமதி வீழ்ச்சி என்பன, அமெரிக்காவில் இருந்து கனடாவுக்கான இறக்குமதியின் பெறுமதியையும் அதிகரிக்கச் செய்யும். அதிகரித்த இறக்குமதி விலைகள், அதனால் ஏற்படும் உள்ளூர் நுகர்வின் அளவு வீழ்ச்சி, ஏற்றுமதியில் ஏற்படக்கூடிய தாக்கம் என்பன, முதல் ஆண்டில் கனடாவின் வியாபாரத்தில் 3.3 பில்லியன் டொலர்கள் வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருமை சேர்த்த பெண்கள்



மனிடோபா மாகாணத்தின் முதலாவது பெண் வான் ஆம்புலன்ஸ் அணியினராக இரு பழங்குடி பெண்கள் பதவியேற்றுள்ளனர். கேப்டன் றொபின் சிலாசெக்ரா மற்றும் முதல் அதிகாரி றவென் பேர்டி ஆகிய இருவருமே மிசிநிப்பி எயர்வேயில் இவ்வாறு இணைந்துள்ளனர். ஒரு டசனிற்கும் குறைவான பழங்குடியை சேர்ந்த பெண் விமானிகளே கனடாவில் உள்ளனர் என கூறப்படுகின்றது. தங்களின் சாதனைகளும் கவனத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளதென இரு பெண்களும் தெரிவித்தனர்.

சர்வதேசத்தின் கவனம் இலங்கையின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளது

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் அலுவல்கள் தொடர்பான உதவி பொதுச் செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் (Jeffrey Feltman) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்தித்து பேச்சுவார்ததை நடத்தினார்.

5ஆவது தடவையாக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வரவேற்றனர்.



முக்கியமான தருணத்தில் அவர் இங்கு வந்திருப்பதை தமிழத் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றது.

இந்நிலையில் சந்திப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

அவர் ஜனாதிபதியை சந்தித்ததாக எம்மிடம் தெரிவித்தார். தற்போது இங்கு இடம்பெறும் ஸ்தீரமற்ற அரசியல் சூழ்நிலையை அவருக்கு எடுத்துரைத்துள்ளோம்.

இந்த கூட்டரசாங்கம் மக்கள் ஆணையின் பிரகாரம் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எனவே அந்த ஆணையை அவர்கள் முழுமையாக நிறைவேற்ற வேண்டியது அவர்களது கடமை என்பதை நாம் வலியுறுத்தியுள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக மக்கள் அவர்களுக்குக் கொடுத்த ஆணையை அவர்கள் உதாசீனம் செய்து கைவிடமுடியாதென்பதை நாம் மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளோம்.

அவரும் தான் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இதை வலியுறுத்தியதாகத் தெரிவித்தார். சர்வதேச சமூகம் இலங்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மிகவும் காலதாமதத்துடன் ஏற்பட்டதெனவும் தற்போது அந்த முன்னேற்றம் குறைந்துள்ளது என்பதையும் அவதானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் விசேடமாக உயர்ஸ்தானிகருடைய அறிக்கையில் இது பிரதிபலிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

சர்வதேசத்தினுடைய கவனம் வெகுவாக இலங்கையின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் இந்த அரசாங்கம் எந்த மக்கள் ஆணையின் மூலம்



ஆட்சியில் அமர்த்தப்பட்டதோ அது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுதான் ஐக்கிய நாடுகள் சபையினதும் பொதுவாக சர்வதேச சமூகத்தனதும் எதிர்பார்ப்பு என்பதையும் தெரிவித்தார். இங்கு தான் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளைப்பற்றி மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரோடு கலந்துரையாடுவதுடன் அதனை அவருக்கு எடுத்துரைப்பேன் என வாக்களித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையினுடைய விசேடமாக பொதுச் செயலாளருடைய ஆதரவு இலங்கையில் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்குரிய முயற்சி வெற்றிபெறவேண்டும் எனபதில் தொடர்ச்சியாக இருக்கும் எனவும் 2015இல் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானம் முற்றுமுழுதாக செயல் வடிவம் பெறவேண்டும் என்பதில் தம்முடைய ஆதரவு இருக்கும் என்பதையும் வலியுறுத்தினார் என சுமந்திரன் தெரிவித்தார்.

'ஜெப்ரி பெல்ட்மன் நம்பிக்கை'

காணாமல் போனோர் அலுவலகத்திற்கு பொறுப்பான ஆணையாளர்கள் இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, விரைவில் காணாமல்போனோர் தொடர்பில் காணாமல் போனோர் அலுவலகம் உரிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் என நம்புவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் அலுவல்களுக்கான உதவி பொதுச்செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் தெரிவித்துள்ளார். இலங்கையின் சிவில் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரதிநிதிகளின் செயற்பாடுகளை பாராட்டினார்.


மேலும் தற்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள வலுகட்டாயமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து பாதுகாத்தல் தொடர்பான சமவாய சட்டம் அரசாங்கம் மக்கள் தொடர்பாக கொண்டள்ள பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கையில் ஜனநாயக நிலைமைகள் பேணப்படும் என இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளதற்கு அமைவாக அரசியலமைப்பு சீர்திருத்தம், நல்லிணக்கம், பயங்கரவாத மற்றும் வன்முறை செயல்களை கட்டுப்படுத்தல் ஆகிய விடயங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

உலகம்

வெளியுறவு செயலரை நீக்கினார் டிரம்ப்

அமெரிக்க வெளியுறவுச் செயலர் பதவியில் இருந்து ரெக்ஸ் டில்லர்சனை அந்நாட்டு அதிபர் டொனால்டு டிரம்ப் நீக்கியுள்ளார். அவருக்கு பதிலாக சி.ஐ.ஏ உளவு அமைப்பின் இயக்குநர் மைக் போம்பேயோ நியமிக்கப்பட்டுள்ளார்.



ரெக்ஸ் டில்லர்சன் செய்த பணிகளுக்காக அவருக்கு நன்றி தெரிவித்துள்ள டிரம்ப் புதிய வெளியுறவுச் செயலர் சிறப்பாகப் பணியாற்றுவார் என்று ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

எக்ஸான்மொபில் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாகியான டில்லர்சன் சுமார் ஒரு ஆண்டுக்கு முன்னர்தான் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார்.

கினா ஹாஸ்பல்-ஐ சி.ஐ.ஏவின் முதல் பெண் இயக்குநராகவும் டிரம்ப் நியமித்துள்ளார்.

பதவி நீக்கம் தொடர்பாக முன்கூட்டியே டில்லர்சனிடம் தெரிவிக்கப்படவில்லை என்றும் வட கொரியாவுடனான உறவுகள் வெகுவாக முன்னேறி வருவதால் அவர் பதவியில் நீடிக்கவே விரும்பினார் என்றும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரிய விவகாரம் உள்பட பல விடயங்களில் டிரம்ப் உடன் பொது வெளியில் அவர் கருத்து முரண்பட்டுள்ளார்.

என்ன காரணம் சொல்கிறார் டிரம்ப்?

“எல்லாம் நன்றாகவே போனாலும், சில விடயங்களில் முரண்பட்டோம். இரான் உடனான ஒப்பந்தம் மோசமானது என நான் நினைத்தேன். ஆனால், அவர் அதை சரியென்று நினைத்தார்” என்று கூறியுள்ளார் டிரம்ப்.

“ரெக்ஸ் மிகவும் நல்ல மனிதர். அவரை நான் மிகவும் விரும்புகிறேன்” என்கிறார் அவர்.

வடகொரியா உள்ளிட்ட காரணங்களால் ரெக்ஸ் டில்லர்சன் பதவியில் நீடிக்கவே விரும்பினார் என்று கூறிய இணைச் செயலர் ஸ்டீவ் கோல்டுஸ்டெயினும் பின்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். வெள்ளை மாளிகை தலைமை அதிகாரி ஜான் கெல்லி கடந்த வெள்ளியன்று டில்லர்சனை அழைத்து அவரைப்பற்றி வெளியாகவுள்ள அதிபரின் ட்விட்டர் பதிவுக்கு தயாராக இருக்குமாறு கூறியுள்ளார் என்றும் அந்தப் பதிவு எதை பற்றியது என்று கூறப்படவில்லை என அசோசியேடட் பிரஸ் தெரிவிக்கிறது.

“கடந்த கால காரணிகளை நிராகரித்து எதிர்காலத்தை நோக்கி பயணிக்க முடியாது”

காணாமலாக்கப்பட்டமை குறித்த விவகாரத்தில் கடந்தகால சம்பவங்களை கருத்தில்கொள்ள முடியாது என்றால் குற்றவாளிகளை அரசாங்கம் அங்கீகரிக்கின்றது என்றே அர்த்தப்படுகின்றது. எனவே வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்படுவதிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாய சட்டமூலத்தை மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். இவ் அரசாங்கம் தீர்வுகள் குறித்து முன்வைத்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்படுவதிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாய சட்டமூலம் மீதான விவாதத்தின் போதே அவர் இக் காரணிகளை குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்படுதல் குறித்து இன்று நாம் ஆராயும் நிலையில் இது இலங்கையின் மிக நீண்டகால நெருக்கடியாக உள்ளது. கடந்த காலங்களில் குறிப்பாக ஜே.வி.பி.யின் கிளர்ச்சிக்காலத்தில் (1979 -1981) பொதுமக்கள் காணாமலாக்கப்பட்டனர். இக் காலத்தில் அப்போதைய எதிர்க்கட்சி உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ இந்த விவகாரம் குறித்து தொடர்ச்சியாக கேள்வி எழுப்பியதுடன் ஜெனிவா வரை சென்று இந் நிலைமைகளை எடுத்துரைத்துள்ளார்.

அதேபோல் கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் காலகட்டம் வரையிலும்கூட நாடு முழுவதும் பேசப்பட்ட ஒரு விடயம் இந்த காணாமல்போனோர் விவகாரமாகும். குறிப்பாக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் காணாமலாக்கப்பட்டமை பரவலாக பேசப்பட்ட ஒரு விடயமாகும். இவற்றின் அடிப்படையில்தான் இன்றுவரை தமிழ் மக்கள் தமது உறவுகளைத் தேடி போராடி வருகின்றனர்.

கடந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் தமது உறவுகளுக்காக தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதில் முக்கியமானது இறுதி யுத்த காலகட்டத்தில் இராணுவத்திடம் சரணடைந்த பொதுமக்களே காணாமல் போயுள்ளனர். இது நியாயமற்ற விடயமாகும். இன்று அரசாங்கம் வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்படுதலிலிருந்து தடுக்கும் சட்டத்தை கொண்டுவரும் நிலைப்பாடுகள் குறித்து கலந்துரையாடி வருகின்றது. இச் சட்டம் கொண்டுவரப்படும் நிலையில் கடந்தகால நிலைமைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், இந்நாட்டின் சுயாதீனத்தில் சர்வதேசத்தின் தலையீடுகள் உள்ளதென்பதும் அவர்களின் அழுத்தம் மற்றும் நெருக்கடிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பதும் சர்வதேச தலையீட்டை ஏற்றுக் கொள்ள முடியாதென்பதும் ஒரு சிலரது நிலைப்பாடாக உள்ளது. இது நாட்டின் சுயாதீனத்தை அழிக்கும் என கூறுகின்றனர். எமக்கும் நாட்டின் சுயாதீனம் குறித்து அக்கறையுள்ளது. ஆனால் நாட்டின் சுயாதீனம் என கூறிக்கொண்டு சர்வதேச சட்டங்களை மீறியும் சர்வதேச தலையீடு இருக்கக்கூடாது என்பதற்கான தான்தோன்றித்தனமாக சட்டங்களை, நியாயங்களை உருவாக்கிக்கொண்டு ஆட்சி செய்வதும் ஒருபோதும் சுயாதீனமாக அமையாது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். நாம் சர்வதேச சட்டதிட்டங்களையும் மதிக்கவேண்டும். அதேபோல் இறுதி யுத்தமொன்று இடம்பெற்றபோது பொதுமக்கள் தண்டிக்கப்பட்டமை, காணாமலாக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாகும்.



“இலங்கையில் புலிகளை அழித்து யுத்தத்தை வெற்றிகொண்ட நோக்கத்திற்காக இலங்கை இராணுவத்தையும் முன்னைய அரசாங்கத்தையும் சர்வதேசம் தண்டிக்கவுள்ளது” எனவும் ஒருசிலர் கூறுகின்றனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஒன்று இடம்பெற்ற நிலையில் விடுதலைப் புலிகளை எதிர்த்து சர்வதேச நாடுகள் அரசாங்கத்தை பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தன. சர்வதேச தலையீடுகள் இந்த யுத்தத்தில் காணப்பட்டன. இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேசத்தின் முழுமையான ஒத்துழைப்பு அமைந்தது. பல நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்தன. பல நாடுகள் நிராகரித்தன. பல நாடுகளிலிருந்து புலனாய்வு தகவல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. முழுமையாக பயங்கரவாதத்தை ஒழிக்க சர்வதேச ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தியா போன்ற நாடுகள் இறுதி யுத்தத்தில் அதிக பங்களிப்பு செய்து இலங்கை அரசாங்கத்தை பலப்படுத்தியுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும்கூட இலங்கையை ஆதரித்து செயற்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகளை ஆதரித்தன என்பது உண்மைக்கு அப்பாற்பட்ட காரணியாகும்.

இவ் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் நாட்டில் தீர்வுகளை பெற்றுத்தருவோம், உண்மைகளை கண்டறிவோம் என கொடுத்த வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

அரசியல் தீர்வு விடயத்தில் அரசாங்கத்தின் பயணம் உறுதியாக இல்லையென்பது தெரிகின்றது. இவ் அரசாங்கம் நாட்டு மக்களுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இந்த சட்டம் எதிர்காலத்தில் நடக்கும் செயற்பாடுகள் குறித்து மட்டுமே கவனம் செலுத்துமெனவும் கடந்தகால சம்பவங்கள் இதில் உள்ளடக்கப்படாது எனவும் வெளிவிவகார அமைச்சர் சபையில் தெரிவித்தார். ஏன் இவ்வாறான ஒரு தீர்மானத்தை அரசாங்கம் முன்னெடுக்கின்றது என

தொ.பக்கம்: 07

காலநிலை

Montreal LONG - TERM FORECAST

வெள்ளி, Mar. 16
High -4 °C Low -12 °C
High Feels like -11 °C

24 மணிநேர இடைவெளியில் குறிப்பிடக்கூடிய சீரற்ற காலநிலையில்லை. மாற்றங்கள் நிகழலாம்.

சனி Mar. 17	ஞாயிறு Mar. 18	திங்கள் Mar. 19
High -7 °C	High -5 °C	High -5 °C
Low -16 °C	Low -17 °C	Low -17 °C
-	~1mm, 2-4cm	-
High Feels like -13°C	High Feels like -11°C	High Feels like -10°C

செவ்வாய் Mar. 20	புதன் Mar. 21	வியாழன் Mar. 22
High -4 °C	High -1 °C	High 1 °C
Low -11 °C	Low -6 °C	Low -4 °C
-	-	1-3cm
High Feels like -7°C	High Feels like -6°C	High Feels like -4°C

The Weather Network
theweathernetwork.com

அலையோசை கலையகம்
alaiyosai.productions@gmail.com

எமது நன்றி...
செய்தி மூலங்கள், படங்கள்:
சர்வதேச இணையத் தளங்கள்.

• அங்கும் •

'இங்கும்'

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வரும் நிலையில்... தமிழ் தலைவர்களின் இராஜதந்திர நகர்வுகளை தடுக்கும், தோற்கடிக்கும் பிரச்சாரத்துடன், நோக்கத்துடன் மீண்டும் 'வெளிப்படையான சிங்களப் பேரினவாதம்' நடந்துமுடிந்த உள்ளூராட்சி தேர்தல்மூலம் தெற்கில் உறுதி படுத்தப்பட்ட நிலையில்... அமெரிக்கத் தூதராகப் பணி யாற்றிய திரு, ஸ்ரீபன் ராப் தற்போது யாழ் சென்றுள்ளார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதி அலுவலகத்தில் போர்க்குற்ற விவகாரங்களுக்கான அமெரிக்கத் தூதராகப் பணி யாற்றியவர். தனது பதவிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்து வடக்கின் பல இடங்களுக்கும் நேரில் சென்ற அமெரிக்க வழக்குரைஞர் திரு, ஸ்ரீபன் ராப் தற்போது யாழ் சென்று தமிழ் தலைவர்களையும், பாதிக்கப்பட்ட தமிழ் பகுதிகளுக்கு சென்று பலதரப்பட்ட மக்களையும் சந்தித்துள்ளார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில், உலக நாடுகளுக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை போன்ற பெரு மன்றங்களுக்கும் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது தட்டிக்கழிப்பதற்காகத் தாமதிப்பதை ஒரு தந்திரமாகக் கடைப்பிடிக்கிறது இலங்கை என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் போர்க்குற்றங்களே நிகழவில்லை என்று கொழும்பு அரசு மறுத்து வந்த நிலையில், தற்போது முல்லைத்தீவுக்குச் சென்ற அவர், இறுதிப் போர் நடைபெற்ற பகுதிகள் ஒன்றிலிருந்து எடுத்த படத்துடன், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இராணுவத்தின் செல் தாக்குதலில் கொல்லப்பட்ட இடம் என்ற விளக்கமும் தற்போது அமெரிக்க தூதரக ருவிற்றரில் பதிவிடப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் என்று ஆதாரப்படுத்தக்கூடிய வகையிலான பதிவை வெளிப்படையாகச் செய்யும் அளவுக்கு இலங்கைப் போர் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து மிகவும் பரிட்சயமானவர் ஸ்ரீபன் ராப். அவரே கொழும்பு அரசு மீது இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படையாவே தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் அம்பாறையில் ஆரம்பமாகி கண்டிவரை விரிவடைந்த இஸ்லாமியத் தமிழர்களுக்கெதிரான சிங்கள பேரினவாதத்தின் வன்முறை கொள்ளை நோக்குடன் காடையர்களின் தாக்குதல் என்பதற்கு அப்பால், சிறுபான்மையினரை நலிவடையச்செய்யும் தாக்குதல் என்பதை சில ஆதாரங்கள் கோடிட்டுக்காட்டியுள்ளது.


கலவரம் நடந்த இடங்களில், கண்டியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றின்மீது ஒரு பெண் மூர்க்கத்தனமாக தாக்குவதையும் வேறு சில இடங்களில் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதலில் பெண்களும் ஈடுபட்டடது மறைகாணி (CCTV) ஆதாரத்துடன் வெளிவந்திருந்தகாட்சியின் மூலம் அவதானிக்க முடிந்தது.

இலங்கையில் தமிழர்களின் அரசியல் தீர்வில், மயிலே மயிலே இறகுபோடு என்பது சிங்களப் பேரினவாதத்திற்கும் பொருந்தும்.

நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடரில், எதிர்வரும் 21ஆம் திகதி பிரதான உரையை நிகழ்த்தவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல்ஹுசைன் அவர்கள் இலங்கை குறித்து காத்திரமான, பொறுப்பான செயல்வடிவ அறிக்கையை வெளியிடவேண்டும். எதிர்பார்க்கப்படுகிறது.

• இருசு •

இவ் வார செய்தி தரும் புகைப்படம்



MONTREAL IRUSU
இருசு

Mailing Address: Office
"Montreal **IRUSU**"
125 Jean Talon West,
Montreal, Quebec, H2R 1W9.
Tel.: 514 447 3344 / 244 5809
Fax: 514.447.3347
e-mail: **irusunews@gmail.com**

Editor / ஆசிரியர்
Irusu Management / இருசு நிர்வாகம்

Managing Director / நிர்வாக இயக்குனர்
Sutha Pathmanathan / சுதா பத்மநாதன்

Thamil Mukavari Publication

விளம்பரங்கள்
அறிவித்தல்கள்

To Advertise

11:00 am to 7:30 pm

Deadline for Advertising
Monday @ 6:00 p.m
for Classified,
every Tuesday @ 6:00 p.m

விளம்பரங்கள் : திங்கள் மாலை
7:30 மணி வரையும்,
அறிவித்தல்கள் : செவ்வாய் மாலை
6:00 மணி வரையும்,
ஏற்றுக்கொள்ளப்படும்

விளம்பரத் தொடர்புகளுக்கு:
Contact for Advertisements

Tel.: 514 244 5809

E-mail: **irusunews@gmail.com**

Advertising & Payment Locations

Montreal - **Parc EX**

125 Jean Talon West,
Montreal, Quebec, H2R 1W9.
Tel.: 514.447 3344

கடந்த கால காரணிகளை...


தெரியவில்லை. ஏன் கடந்தகால சம்பவங்களை ஆராய முடியாது? இலங்கையில் பயங்கரவாதத்தை எதிர்த்து இலங்கை அரசாங்கம் யுத்தம் செய்தது. இதில் இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு தரப்பை பயன்படுத்தி அரசாங்கத்தின் கட்டளைக்கமைய இராணுவம் யுத்தத்தை முன்னெடுத்தது. இதில் ஆயுதப் படைகளுக்கும் ஆயுத தாரிகளுக்கும் யுத்தம் இடம்பெற்றதற்கு அப்பால் அப்பாவி மக்கள், ஆயுதம் ஏந்தாத போராளிகள் என அனைவரும் ஏன் தண்டிக்கப்பட்டனர்? பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். இவற்றை மறுக்கவே முடியாது. இவற்றுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தும் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும்.

ஆனால் கடந்தகால சம்பவங்களை நிராகரித்து உண்மைகளை மறைப்பதென்பது குற்றவாளிகளுக்கு அரசாங்கம் அங்கீகாரம் கொடுக்கின்றது என்பதே அர்த்தமாகும். இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்கள், ஆயுதம் ஏந்தாத போராளிகள் காணாமலாக்கப்பட்டமையை விடுதலைப் புலிகள் என்ற நிலைப்பாட்டில் இருந்து அவதானிக்க முடியாது. இரண்டும் வேறுபட்ட காரணிகளாகும்.

இதனை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும். இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கெதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே இது எதிர்காலத்தில் மட்டுமல்ல, கடந்த கால குற்றங்களையும் கருத்தில் கொண்டு குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். பொறுப்புக்கூறல் விடயங்களை அரசாங்கம் தட்டிக்கழிக்க முடியாது.

நெருக்கடிகளை அரசாங்கம் சார்ந்திருக்கக்கூடாதென்றால் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கவேண்டிய கடமையுள்ளது. ஆகவே அரசாங்கம் இன்று கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து மீண்டும் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும் செயற்பாடுகளை கையாள வேண்டும் எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

தண்டனை கிடைக்காதென்ற நம்பிக்கையே...



எந்த காரணமும் இல்லை. ஏனெனில் அது இலங்கை வரலாற்றில் ஒரு அங்கமாகவே இருந்து வந்துள்ளது.

இவ்வாறான நிகழ்வுகள் இந்நாட்டிற்கு புதிய விடயமல்ல. இந்நாட்டின் 70 வருட சுதந்திர வரலாறானது எண்ணிக்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான இத்தகைய சம்பவங்களால் நிறைந்துள்ளது. இது நல்ல விடயமல்ல. இது பெரும்பான்மையினரின் நல்லதொரு பிரதிபலிப்பு அல்ல - அதாவது காலத்துக்கு காலம் எண்ணிக்கையில் குறைந்த மக்கள் இத்தகைய வன்முறைகளை அனுபவிக்கவேண்டும் என்பதும் அவ்வாறான நிலைமைகளில் தண்டனை கிடைக்காதென்ற நம்பிக்கையுமாகும்.

இப்பிரேரணையை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் வரலாற்றில் நிகழ்ந்த இவ்வாறான பல சம்பவங்களை குறிப்பிட்டிருந்தார். இதை செவிமடுக்கையில், இவ்வெந்தத் தருணத்திலும் குற்றவாளிகள் கைது செய்யப்படவோ, சட்ட நடவடிக்கை எடுக்கப்படவோவில்லை என்பது புலனானது. தண்டனை கிடைக்காதென்ற நம்பிக்கை இவ்வாறான விடயங்களை செய்வதற்கான தைரியத்தை வரவழைக்கிறது. நீண்ட, இவ்வாறான சம்பவக் கோலங்களைக் கொண்டதோர் வரலாற்றின் விளைவால், தமக்கு எதிரானசட்ட நடவடிக்கை ஏதும் எப்போதும் எடுக்கப்படமாட்டாது என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர். இது கவலைக்கிடமானதோர் வரலாறாகும்.

கண்டி மாவட்டத்தில் சட்டமும் ஒழுங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டு நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். பிரேத பரிசோதனை அவசியமானது. அது நடைபெற வேண்டும். நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆனால் அத்துடன் எல்லாம் முடிந்துவிடவில்லை. நாங்கள் இவ்வாறான சம்பவங்கள் நிகழும் போதெல்லாம் வெறுப்பை, அனுதாபங்களை தெரிவிப்பது இன்னொரு அத்தகைய சம்பவம் சில மாதங்களிலேயே நிகழ்வதை காண்பதில் முடிகின்றது. இவ்வாறான மனநிலை முழுமையாக மாறவேண்டும். 2015ஆம் ஆண்டு ஜனவரியில் மாற்றமொன்று நேர்ந்த போது இந்நாட்டின் பிரஜைகளின் எதிர்பார்ப்பு வித்தியாசமானதாக இருந்தது.

அவர்கள் இந்த தண்டனை கிடைக்காதென்ற நம்பிக்கை கலாச்சாரம் முடிவுறும் என எதிர்பார்த்தனர். எல்லா மக்களும் எவ்வகையான இனம், மதம், பின்னணி, புவியியல் வாழிட வேறுபாடுகளுக்கு மத்தியில் அமைதியான வாழ்கை வாழலாம் என எதிர்பார்த்தனர்.

ஆனால் அது நொறுக்கப்பட்டுவிட்டது. இந்த ஒரு சம்பவத்தினால் மட்டுமல்ல இந்த அரசாங்கமும் கொண்டிருக்கும் அதேமாதிரியான மனப்பான்மையினாலும் ஆகும். அவ் மனப்பான்மை யாதெனில், “பெரும்பான்மை சமூகத்தினரில் எங்களுக்கு எதிரிகளை உண்டாக்காமல் இருப்போம்” என்பதே. ஆனால் பெரும்பான்மை சமூகம் உண்மையில் இவ் வன்முறைகள் தொடர்வதை எதிர்பார்க்கவில்லை.

பெரும்பான்மையினரில் 90-95%-க்கும் அதிகமானோர் சமாதானத்தை விரும்புபவர்களும் இவ்வாறான சம்பவங்களால் வெறுப்படைந்தவர்களுமாவர். ஆயினும் அரசாங்கத்திடம் எப்போதும் கடும் அரசியற்போக்குடையவர்களின் தவறான செயல்களை ஊக்கமளிக்கும் வகையில் செயற்பட வேண்டும் என் ஒரு நம்பிக்கை இருக்கிறது.

ஆகவே இதை மென்மையாக கையாளுகிறீர்கள். பொறுப்புக்கூறல் தொடர்பாக நங்கள் கேள்வியெழுப்பும்போது உடனடியாக அரசாங்கம் பின்னடிக்கின்றது, அதைச்செய்தால் நாங்கள் மக்கள் ஆதரவை இழந்துவிடுவோம் என அரசாங்கம் நினைக்கின்றது. அது உண்மையல்ல. இவ்வாறான, தண்டணை கிடைக்காதென்ற நம்பிக்கையளிக்கும் செயற்பாடுகளே வன்முறைகளை அதிகரிக்கச் செய்கின்றது.

நாங்கள் பெருமான்மையினர் என் நினைப்பவர்களுக்கு சிங்களம் மற்றும் பௌத்தத்தை ஆதரித்து பேசினால் நாம் பாதுகாப்பாக இருந்துவிடலாம் என நினைக்கின்றனர். இதை பல சந்தர்ப்பங்களில் நிரூபித்து உள்ளனர். அது வெறுக்கத்தக்க விடயமாகும். இது இந்நாட்டின் மீதும் இவ் அரசாங்கத்தின் மீதும் வந்துள்ள அவமானமாகும்.

தொ.பக்கம்: 19

“சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்”

குற்றங்கள் தண்டிக்கப்படாமல் விடப்பட்டதன் ஆபத்துக்களை இலங்கை தெளிவாக காட்டுகின்றது என தெரிவித்துள்ள பன்னாட்டு சட்டவாளர் றிச்சாட் ஜே றோஜெர்ஸ், சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு சுயாதீனமாக இயங்கி வரும், சிறிலங்காவின் நிலைமாறுகால நீதிச்செயற்பாடுகளை கண்காணிக்கும் (Sri Lanka - Monitoring and Accountability Panel (MAP) பன்னாட்டு நிபுணர் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும், போர் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யும் கம்போடிய கலப்பு நீதிமன்றத்தின் சட்டவாளருமாகவும் றிச்சாட் ஜே றோஜெர்ஸ் இருக்கின்றார். சிறிலங்கா விவகாரம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

“சிறிலங்காவில் உள்ள நிலைமை குற்றங்கள் தண்டிக்கப்படாமல் விடப்படுவதன் ஆபத்துகளைத் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது பெருமளவிலான குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் சித்திரவதையும் பாலியல் வன்செயலும் இப்போதும் திட்டமிட்ட அமைப்புசார் குற்றங்களாகவே இருப்பது, இது சிறிலங்கா அரசாங்கம் செயல்படுத்தும் வன்ம உத்தியின் பகுதி என்றே எண்ணச் செய்கிறது.”

“மனித உரிமைப் பேரவை சிறிலங்காவின் நிலைமையைப் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பும்படி, ஐநா பாதுகாப்புசபை எடுத்துரைக்க வேண்டும். இது சிறிலங்காவில் பாதிப்புற்ற மக்களுக்கும் பொறுப்புக்கூறல் கோரும் மனித உரிமைக் காவலர்களுக்கும் ஆதரவு தெரிவிப்பதாக அமையும்” எனத் தெரிவித்துள்ளார்.

'புதிய சுதந்திரன்' வெளியீட்டு விழா

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் 'புதிய சுதந்திரன்' வார இதழ் புதன்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது. நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளருமாகிய சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.



நிகழ்வில் புதிய சுதந்திரன் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் எம்.அகிலனிட மிருந்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான மாவை சேனாதிராஜா பத்திரிகையின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். அத்துடன், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களுக்குப் பிரதிகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவல் அடிகளார், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா மற்றும் இந்து, இஸ்லாமிய மதகுருமார், மாகாண சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.





அதேவேளை, புதிய சுதந்திரன் பத்திரிகை வெளியிடும் நிகழ்வு மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்திலும் இன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா. சிறிநேசன், க.கோடீஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி மூத்த பிரதித் தலைவருமான பொன்.செல்வ ராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், வணபிதா அல்போன்ஸ் மேரி, கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கோ.கருணாகரம், நி.இந்திரகுமார், மா.நடராசா, த. கலையரசன், மு.இராஜேஸ்வரன், ஏழுத்தாளர் வாகரை வாணன் இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரதிநிதிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

"இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த முடியாது"

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்த முடியாது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் புதன்கிழமை இடம்பெற்ற 'புதிய சுதந்திரன்' பத்திரிகை வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஜெனீவா கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. இக்கூட்டத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக பிரித்தானியா ஒழுங்குபடுத்திய உறுப்பு நாடுகளுக்கான கூட்டத்தில் 26 நாடுகள் பங்கு பற்றின. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன என்பதை கேட்டு அறிந்துள்ளார்கள். எத்தகைய அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும் என நாங்கள் உத்தியோகபூர்வமாகக் கூறியுள்ளோம்.

தற்போது கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில் பக்க நிகழ்வுகள் நடை-பெற்று வருகின்றது. இம்முறை இலங்கை தொடர்பாக 32 நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. இவற்றை யார் நடத்துகிறார்கள்- ஏன் நடத்துகிறார்கள் என்ற தெளிவில்லை. உறுப்பு நாடுகளும் தமிழ் மக்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன என்பதைத்தான் கேட்கின்றார்கள்.

சிலர் ஜெனிவா சென்று தீர்மானங்களை எரிக்கிறார்கள். நாங்கள் தீர்மானம் வேண்டும் என்கின்றோம். ஐக்கிய நாடுகள் சபையில் எவற்றைச் செய்ய முடியும் என்ற விடயம், எமது மக்களுக்கு சரியாக போய் சென்றடையவில்லை. அங்கு சென்றால் எல்லாம் கிடைத்து விடும் என்று எமது மக்களுக்கு ஊக்குவித்துள்ளார்கள். ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 36 விடயங்கள் இருக்கின்றன. இதில் மூன்று விடயங்கள் பொறுப்புக்கூறல் சம்பந்தமானது இறுதியாக போர்க்குற்றம் சம்பந்தப்பட்டது. ஏனைய 33 விடயங்களும் மிக முக்கியமானவை. இவ்வாறான பலவற்றை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் பிரசாரம் என்னவெனில், இந்தத் தீர்மானத்தினால் பயனில்லை. இதைக் கைவிட்டுவிட்டு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும்.

இதனைத்தான் தற்போது கூறிவருகிறார்கள். இது மக்களுக்குத் தேவையானதா-யாராவது பகிரங்க வெளியில் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த முடியும் என கூறமுடியுமா - இது எவராலும் முடியாது.

இந்த உண்மை எல்லோருக்கும் தெரியும். பாதுகாப்பு சபை இந்த விடயத்தை குற்றவியல் நீதி மன்றத்தில் பாரப்படுத்தாது. இந்த விடயத்தை முன்னின்று நடத்துகின்ற அமெரிக்காவே இதனைச் செய்யாது. அமெரிக்காவே இந்த நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

2012ஆம் ஆண்டு தொடக்கம் இத்தகைய தீர்மானத்தை கொண்டு நடத்துக்கின்ற அமெரிக்காவே இதனை செய்யாதபோது இதனைத் தெரிந்து கொண்டு மக்களுக்கு பெய்யான பரப்புரைகளைச் செய்து இதைச் செய்வோம் என்று பரப்புரை நடத்துகின்றது.

இதற்கு மாற்றுப் பிரசாரம் கிடையாது. இதை நான் சொன்னால் ஊடகங்கள் சுமந்திரன் சொல்கின்றார் சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்லமுடியாது- இலங்கையை அவ்வாறு அனுப்பமுடியாது அவர் இலங்கையை பாதுகாக்கிறார் என ஊடகங்கள் கூறும்.

அவ்வாறு ஊடகங்கள் கூறும்போது எங்களுடைய உத்தியோகபூர்வமான காரணம் என்ன என்பதை எங்களுடைய பத்திரிகைகளில் வெளியிடுவதற்காகத்தான் 'புதிய சுதந்திரன்' வெளியீடு செய்கின்றோம்." என்று தெரிவித்தார்.

கோட்பாடுகள் மூலமாக நவின அறிவியலுக்கு திசைவழி காட்டியவர்

1. இங்கிலாந்தில் ஆக்ஸ்ஃபோர்டில் 1942, ஜனவரி 8 அன்று பிறந்தார்.
2. கேம்பிரிட்ஜில் முனைவர் பட்டம் பெறுவதற்கு முன் 1959-இல் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில் நேச்சுரல் சயின்ஸ் பயின்றார்.
3. 1963-இல் 'மோட்டார் நியூரான்' எனும் நோயால் பாதிக்கப்பட்டதால் அதிகபட்சம் 2 வருடங்களே வாழ்வார் என கூறப்பட்டது.
4. கருந்துளைகள் உமிழ்வு தொடர்பான 'ஹாக்கிங் கதிரியக்கம்' கோட்பாடு 1974-ல் வெளிவந்தது.
5. A Brief History of Time என்ற பெயரில் 1988-இல் ஹாக்கிங் வெளியிட்ட புத்தகம் 10 மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்றது
6. இவரது வாழ்க்கை குறித்த The Theory of Everything என்ற படம் 2014-இல் வெளியானது.



ஸ்டீஃபன் ஹாக்கிங்

எனக்கு மரணம் குறித்த அச்சம் இல்லை. அதற்காக விரைவாக இறந்து போக வேண்டும் என்றில்லை. நான் முடிக்க வேண்டிய பணிகள் அதிகம் உள்ளன என்று ஒரு முறை கூறினார் ஸ்டீஃபன் ஹாக்கிங். அந்த அனைத்து பணிக ளையும் முடித்துவிட்டாரா என்று தெரியவில்லை. 76 வயதில் இந்த பூவுலகை விட்டு சென்றிருக்கிறார் ஹாக்கிங்.

ஹாக்கிங் இறப்பு குறித்து சிலரிடம் பேசினோம். அவர்கள், இயற்பியலை அனைவரும் புரிந்து கொள் ளும்படி விளக்கியவர் ஹாக்கிங் என்கிறார்கள்.

சமகால ஐன்ஸ்டீன்

சமகாலத்தில் நம்முடன் வாழ்ந்த ஐன்ஸ்டீனை இழ ந்திருக்கிறோம் என்கிறார் சென்னை பிர்லா கோள ரங்கத்தின் இயக்குநர் அய்யம்பெருமாள்.

"கருந்துளை விரிவடையகிறது என்ற கருத்து இருந்த நிலையில், 'இல்லை' கருந்துளை சுருங் குகிறது என்ற கோட்பாட்டை முன்வைத்து நிறு வியவர் ஸ்டீஃபன். பெருவெடிப்பு கோட்பாட்டை அவரைவிட யாராலும் எளிமையாக விளக்க முடி யாது. அண்டவியல் ஆராய்ச்சியில் அவரின் பங்கு மகத்தானது" என்கிறார் அய்யம்பெருமாள்.

திசைவழி காட்டியவர்

ஹாக்கிங் மரணம் அறிவியல் உலகுக்கு பேரிழப்பு என்கிறார் இளம் அறிவியலாளர் ரிஃபாத்.

ரிஃபாத், "இன்றைய தலைமுறைக்கு அறிவியல் குறித்து உதவேகம் அளிப்பவராக இருந்தார். இளம் விஞ் ஞானிகள் யாரிடம் வேண்டுமானாலும் பேசி பாருங்கள். அவர்கள் நிச்சயம் ஹாக்கிங்கால் ஈர்ர்க் கவும், தூண்டவும் பட்டிருப்பார்கள்".

'கோட்பாடு அறிவியலை விளக்குவது கடினம்.'

ஆனால், ஹாக்கிங் அதனை அனைவரும் புரிந்து கொள்ளும்படி விளக்கினார். தனது கோட்பாடுகள் மூலம் இயற்பியல் துறைக்கு வெளிச்சமும், நவீன அறிவியலுக்கு திசைவழியும் காட்டியவர் அவர். நரம்பு தொடர்பான நோயினால் சிறுவயதிலேயே பாதிக்கப்பட்ட போதும், அதனையெல்லாம் கடந்து அவர் தொட்ட உச்சம், அனைத்து காலத்துகுமான பாடம்" என்கிறார் ரிஃபாத்.

ஊந்து சக்தி

ஹாக்கிங், கலிலீயோ இறந்த நாளில் பிறந்து, ஐன்ஸ்டீன் பிறந்த நாளில் இறந்திருக்கிறார். வாழ்வு மட்டும் அல்ல ஹாக்கிங் இறப்பும் அறிவியல் சுற றியே இருந்திருக்கிறது என்கிறார் கல்வியாளரும் அறிவியல் குறித்து தொடர்ந்து எழுதி வருபவரு மான ஆயிஷா இரா. நடராஜன்.

"கருந்துளை கோட்பாடு, வேறு கோள்களில் உயி ரினம் இருக்கிறதா என்ற ஆய்வு, பெரு வெடிப்பு கோட்பாடு என்று சமகாலத்தின் அனைத்து முக்கிய ஆராய்ச்சிகளிலும் இவரது பங்கு இருந்திருக்கிறது. தான் அறிந்த அறிவியலை பிறருக்கு கடத்துவதிலும் மிக தெளிவாக இருந்தார் 'தி பிரீஃப் ஹிஸ்டரி ஆஃப் டைம்', 'தி கிராண்ட் டிசைன்' என்று தொட ர்ந்து எழுதிக் கொண்டு இருந்தார்" என்கிறார் நட-ராஜன். மேலும் அவர், "அறிவியலை நேர்மறையாக அணுகி, நம்பிக்கை அளித்ததில் அவரது பங்கு மகத்துவமானது. அவரது கணித கோட்பாடுகள் ஆராய்ச்சியாளர்கள் அனைவருக்கும் வழிகாட்டும். அதுமட்டுமல்ல, அண்டவியல் ஆராய்ச்சியையும், குவாண்டம் இயற்பியலையும் ஒற்றை புள்ளியில் கொண்டு வந்து நிறுத்தியவர்" என்று விவரிக்கிறார் நடராஜன்.

அறிவியலை கடந்து அவரது அரசியல் புரிதல் தெளிவானது. மாற்று திறனாளிகளுக்காகவும் தொட ர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறார் அவர்.


இலங்கையில் சூரிய சக்தி தொழில்நுட்பம்

இலங்கையில் சூரிய சக்தி தொழில்நுட்ப விருத் திக்கென இந்திய அரசு 100 மில்லியன் அமெ ரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.

கடந்த 10 மற்றும் 11ஆம் திகதிகளில் இந்தியாவி ற்கு விஜயம் செய்திருந்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவில் சர்வதேச சூரிய சக்தி குழுமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த சூரிய சக்தி மாநாட்டில் கலந்துகொண்டிருந் தார். இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக 46 நாடுகளை ஒன்றிணைத்த வகையில் இடம்பெற்ற இம்மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள், அபிவிருத்தி வங்கி தலைவர்கள், புதுப்பிக்கத்தக்க சக்திவள வர்த்தக தலைவர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டின் போது சூரிய சக்தி தொழில்நுட்ப மாநாட்டு திட்டங்கள் அறிக்கை வடிவில் வெளியிடப் பட்டது. இந்தியாவின் நிதியுதவியின் கீழ் 15 நாடுக ளுக்கு 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சூரிய சக்தி தொழில்நுட்பம் ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதன்படி இலங்கைக்கான சூரிய சக்தி தொழில் நுட்பத்திற்கென 100 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 200ஆயிரம் வறிய குடும்பங்களுக்கான சூரிய சக்தி தொழில்நுட்பம் மற்றும் அரச பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள் என்பவற்றிற்கான சூரிய சக்தி தொழில்நுட்பத்தை நிறுவுதல் என்பன இம்முதலீட் டின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. இம்மாநாட் டின்போது இந்திய ஜனாதிபதி நரேந்திர மோடி சூரிய சக்தி திட்டத்தினால் பிரான்ஸின் பாரிஸ் நகரில் ஏற்பட்ட நேர்மறையான காலநிலை மாற்ற த்தை நினைவு கூர்ந்தார்.



அனைத்து நாடுகளும் தமது சக்திவலு தேவையை நிறைவு செய்வதற்கான வாய்ப்பேற்படுத்தல், பொதுவான கட்டமைப்பு ஒன்றின் மூலமாக ஒன்றிணைந்து செயற்படல், சூரிய சக்தி தொடர் பான தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல் ஆகிய வற்றை பிரதான நோக்கமாக கொண்டு சூரிய சக்தி மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத் தக்கது.

அறிவியல் - அதிசயம் - சினிமா - தொழ

வியாழன் துணை கிரகம் 'யூரோப்பா'வின்... புதிய தகவல்..!

வியாழன் கிரகத்தின் துணை கிரகம் யூரோப்பா. இது முழுவதும் ஐஸ்கட்டியால் ஆனது. இங்கு உயிரினங்கள் வாழ முடியும் என்ற விவரம் சமீபத்தில் வெளியாகி உள்ளது.



பிரேசில் நாட்டின் சாவ் பாவ்லோ பல்கலைக் கழகத்தின் நிபுணர்கள் சமீபத்தில் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டனர். யூரோப்பா துணை கண்டம் பற்றி சேகரிக்கப்பட்ட தகவல்கள் பூமியுடன் ஒத்துப் போவதை கண்டறிந்தனர்.




வியாழன் கிரகத்தின் துணை கிரகம் யூரோப்பா. இது முழுவதும் ஐஸ்கட்டியால் ஆனது. இங்கு உயிரினங்கள் வாழ முடியும் என்ற விவரம் சமீபத்தில் வெளியாகி உள்ளது.

வியாழக் கோளுக்கு 66 துணைக்கோள்கள் இவற்றில் 36 கோள்கள் 3 கிமீற்றரிலும்விட குறைவான அகலம் கொண்டவை. 66 துணைக்கோள் நிலவுகளில், நான்கு பெரிய நிலவுகள். 'ஐஓ', 'யூரோப்பா', 'கனிமீடு', 'காலிஸ்டோ' இவை கிட்டத்தட்ட பூமியின் துணைக்கோள் சந்திரனின் அளவை உடையவைஇதன் விட்டம் 3.121.6 km ஆகும்.



தென்ஆப்பிரிக்காவின் ஜோகன்ஸ்பர்க் அருகே போங்யங் தங்க சுரங்கத்தின் 2.8 கி.மீட்டர் ஆழத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. சூரிய ஒளிபடாத அங்கு தண்ணீரில் பாக்டீரியாக்கள் உயிர் வாழ்வதும் கத்ரியக்கங்கள் ஏற்படுவதும் தெரியவந்தது.

அதே போன்ற நிலை 'யூரோப்பா' துணை கிரகத்தின் நிலப்பரப்பிலும் உள்ளது. அங்குள்ள நிலமேற்பரப்பில் ஐஸ்படுகையின் 10 கி.மீட்டர் ஆழத்தில் கடல் போன்ற தண்ணீர் மறைந்துள்ளது. அதில் உயிரினங்கள் வாழும் சூழ்நிலை இருக்கலாம் என கருதப்படுகிறது.



'யூரோப்பா நிலவு' 1610இல் கலீலியோவால் கண்டுபிடிக் கப்பட்டது. 18.10.1989இல் நாசா "கலிலியோ" என்னும் விண்கலத்தை அனுப்பி யிருந்தது. 07. 12. 1995இல் வியாழனை அடைந்தது. 21. 09. 2003 வரை வியாழன் ஆராட்சியில் ஈடுபட்டிருந்தது. வியாழனின் வழிமண்டலத்திற் குள் நெருக்கிச்சென்ற விண்கலமும் இதுவே. ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தினால் எதிர்வரும் 2022இல் வியாழனை நோக்கி புதிய விண்கலம் ஏவ திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

'அன்டார்டிகாவில்' ஏற்பட்டவை..!

'அன்டாட்டிக்காவின்' பனிமலைப் பகுதியில் ஏற்பட்ட ஓர் பிரத்தியேக காட்சியை 'Google' வெளியிட்டிருந்தது.



'அன்டார்டிகாவின்' பனிமலைப் பகுதியில் ஒரு பொருள் வேகமாக ஊர்ந்துசெல்வதுபோல் காட்சி ஒன்று 'Google'ளில் பதிவாகியிருந்தது.



பனிப்பாறைகளில் ஏற்பட்ட விரிசலே அவ்வாறு அது காட்சி தருகிறது என குறிப்பிடுகின்றனர். வேறு சிலர், பனிப்பாறை பிளவு என்றால் அதன் தாக்கம் தெளிவாக தெரிந்திருக்கும், ஆனால் இது அவ்வாறு இல்லை எனவும் வேற்றுக்கிரகவாசிகள் நகர்வாக இருக்கலாம் என விளக்கம் அளித்துள்ளனர்.

ல்நுட்பம் - தேடல் - பல்சுவை - மருத்துவம்

ஆய்வில் வெற்றிகண்ட... 5 வகை நிரிழிவு !

நீரிழிவு என்பது 5 தனித்தனி நோய்களால் உருவாகுகின்றது என்றும் ஒவ்வொரு வடிவத்திற்கும் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றும் மருத்துவ ஆய்வுத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.



குருதியில் சர்க்கரை அளவு கட்டுப்படுத்த முடியாத நிலையே நீரிழிவாகும். இது பொதுவாக வகை 1, வகை 2 என இரு பிரிவாக பிரிக்கப்படுகிறது.

ஆனால், நீரிழிவுக்காக மருந்து எடுத்துக் கொள்வோரின் நிலை மிகவும் சிக்கலாக இருப்பதாக ஸ்வீடன் மற்றும் பின்லாந்து மருத்துவ ஆய்வாளர்கள் தற்போது தெரிவித்துள்ளனர்.

உலக அளவில் வயதுவந்த 11 பேரில் ஒருவரை பாதிக்கின்ற நீரிழிவு, மாரடைப்பு, பக்கவாதம், பார்வை இழப்பு, சிறுநீரக செயலிழப்பு, உறுப்பு நீக்கம் ஆகியவற்றுக்கான ஆபத்துக்களை உருவாக்குகிறது.

வகை 1 நீரிழிவு, நோய் எதிர்ப்பு அமைப்பு தொடர்புடைய நோயாகும். இது உடலில் இன்சுலின் சுரக்கின்ற பீட்டா செல்களை தாக்குகின்றது. இதனால் இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவதற்கான ஹார்மோன் சுரக்காமல் போய்விடுகிறது.

வகை 2 நீரிழிவு மோசமான உணவு பழக்கத்தால் ஏற்படும் நோயாகும். உடலிலுள்ள அதிக கொழுப்பு இன்சுலின் செயல்படுவதை பாதிக்க செய்கிறது.

ஸ்வீடனிலுள்ள லுண்ட் பல்கலைக்கழக (Lund University) நீரிழிவு மையமும், பின்லாந்தின் மூலக்கூறு மருத்துவ கழகமும் இணைந்து நடத்திய ஒரு ஆய்வில், 14 ஆயிரத்து 775 நோயாளிகள், அவர்களின் இரத்த பரிசோதனை விபரங்களோடு பரிசீலனை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆய்வின் முடிவுகள், நீரிழிவு நோயாளிகளை 5 வேறுபட்ட குழுவினராக வகைப்படுத்தி காட்டுகின்றன.

குழு 1 - கடும் நோய் எதிர்ப்பு அமைப்புக்கு எதிரான இந்த நீரிழிவு, பரவலாக பாரம்பரிய வகை 1 நீரிழிவு வகையை சார்ந்ததாக உள்ளது. ஆரோக்கமாக தோன்றுகின்ற இளம் பருவத்தில் இருப்போரை இது பாதிக்கிறது. இன்சுலினை உற்பத்தி செய்ய முடியாத நிலையை இந்த வகை நீரிழிவு ஏற்படுத்துகிறது.



குழு 2 - கடுமையான இன்சுலின் குறைபாடு உடைய நீரிழிவு நோயாளிகள் தொடக்கத்தில் குழு 1 போலவே தோற்றமளித்தனர். இவர்கள் இளமையாக இருந்தனர். ஆரோக்கியமான எடையை கொண்டிருந்தனர். இன்சுலின் சுரப்பதில் சிக்கல் இருந்தது. ஆனால், நோய் எதிர்ப்பு சக்தியில் எந்த குறைபாடும் இவர்களுக்கு இல்லை.

குழு 3 - சுரக்கப்படும் இன்சுலினுக்கு கடும் எதிர்ப்புத் தன்மையுடைய நீரிழிவு நோயாளிகள். இவர்கள் பொதுவாக அதிக எடையுடையவர்களாக இருந்தனர். இன்சுலின் சுரந்தது. ஆனால், சுரக்கின்ற இன்சுலினை அவர்களின் உடல் சரியாக செயல்பட அனுமதிக்க வில்லை.

குழு 4 - மிதமான உடல் பருமன் தொடர்பான இந்த நீரிழிவு அளவுக்கு மிஞ்சிய உடல் எடையுடையோரிடம் முக்கியமாக காணப்பட்டது. ஆனால், குழு 3-இல் உள்ளதை விட இயல்பான மிகவும் நெருக்கமானதாக இது இருக்கிறது.



குழு 5 - நடு வயது தெடர்பான இந்த நீரிழிவு, நோயாளிகள் பிற குழுவினரை விட குறிப்பிடும்படியாக வயது அதிகமானதாக இருந்தபோது சில அறிகுறிகள் தோன்றின. இவர்களின் நோய் மிதமானதாக இருந்தது.

இந்த 5 குழுக்களில், இரண்டு மிதமானவற்றை விட 3 கடுமையான வடிவங்களுக்கு நாம் மிகவும் தீவிர சிகிச்சை அளிக்க முடியும்.

நோய் எதிர்ப்பு அமைப்புக்கு எதிரான நிலை இல்லாததால், குழு 2 நோயாளிகள் தற்போது இரண்டாம் வகை நீரிழிவு நோயாளிகளாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

இருப்பினும், அவர்கள் அதிக குண்டாக இருப்பதைதவிட பீட்டா செல்களின் குறைபாட்டால் இவர்களுக்கு நோய் உருவாகியிருக்கலாம் என்று இந்த ஆய்வு பரிந்துரைக்கிறது. இதனால், தற்போது வனை 1ஆக வரையறுக்கப் பட்டுள்ள மிதமான நோயாளிகளுக்கு கொடுக்கப் படுகின்ற நெருங்கிய அளவிலான சிகிச்சை வழங்கலாம். ⇨ பக்கம் 15

உலக பணக்காரர் பட்டியலில்...
முதலிடம் பிடித்த அமேசான் நிறுவனர் ஜெப் பீசாஸ் !

உலக பணக்காரர்களுக்கான போர்ப்ஸ் பட்டியலில் அமேசான் நிறுவனர் ஜெப் பீசாஸ் (Jeff Bezos) முதலிடத்தை பிடித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.




அமெரிக்காவில் இருந்து வெளியாவது போர்ப்ஸ் பத்திரிகை. ஒவ்வொரு ஆண்டும் உலக பணக்காரர்களின் பட்டியலை இந்த பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

இந்தப் பட்டியலுக்கு வர்த்தக உலகில் ஏகப்பட்ட எதிர்பார்ப்பு. இந்நிலையில், இந்த ஆண்டுக்கான உலக பணக்காரர்களின் பெயர் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டு உள்ளது. இதில் முதல் இடத்தை பிடித்துள்ளது அமேசான் நிறுவனர் ஜெப் பீசாஸ். இவரது சொத்து மதிப்பு 120 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவரை தொடர்ந்து, மைக்ரோ சாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். இவரது சொத்து மதிப்பு 90 பில்லியன் டாலர் ஆகும்.

கடந்த ஆண்டு 544வது இடத்தில் இருந்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்த ஆண்டு 200 இடங்கள் பின்தங்கி 766-வது இடத்தை பெற்றுள்ளார் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழ் மொழி இணையத்தளங்கள்..!



உலக அளவில் அதிக இணையதளங்கள் கொண்ட மொழிகள் பட்டியலில் தமிழ் மொழி இணையத்தளம் இரண்டாம் இடத்தில் உள்ளது.

ஆங்கில மொழிக்கு அடுத்தபடியாக தமிழ் மொழியில் அதிக இணையதளங்கள் உள்ளன என்று ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

ஆய்வுபடுத்தப்பட்ட 5 வகை...

13ஆம் பக்க தொடர்ச்சி

இதனால், தற்போது வனை 1ஆக வரையறுக்கப்பட்டுள்ள மிதமான நோயா-ளிகளுக்கு கொடுக்கப்படுகின்ற நெருங்கிய அளவிலான சிகிச்சை வழங்கலாம்.

பார்வை இழப்பு ஏற்படுவதற்கு அதிக ஆபத்து நிறைந்தவர்களாக குழு 2 இருப்போர் உள்ளனர். ஆனால், குழு 3இல் இருப்போர் சிறுநீரக நோய் ஏற்படுவதற்கு அதிக ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். எனவே, மேம்படுத்தப்பட்ட பரிசோதனையால் இதில் சில குழுவினர் பயன்பெறலாம்.


"முதலாம் வகை மற்றும் இரண்டாம் வகை என இரண்டும் மிகவும் துல்லியமான வகைப்படுத்தப்பட்ட அமைப்பு கிடையாது என்பதை பெருமளவு சிறப்பு நிபுணர்கள் அறிவர்" என்றும் "எதிர்காலத்தில் நீரிழிவை நாம் நோயாக எவ்வாறு பார்க்கப்போகிறோம் என்பது பற்றியது இது" என்று லண்டனிலுள்ள இம்பீரியல் கல்லூரியின் ஆலோசகரும், சிகிச்சை ஆய்வாளருமான டாக்டர் வின்டோரியா சலேம், அவர்கள் ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்த ஆய்வு இரண்டாவது வகை நீரிழிவை மேலும் பிரிந்து அதிக விபரங்களோடு காட்டுகின்ற நம்பதகுந்த முயற்சியை எடுத்திருக்கிறது. இன்றைய நடைமுறையை உடனடியாக மாற்ற போவதில்லை என்ற எச்சரிக்கையையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வு ஸ்காண்டினேவிய மக்களிடம் மட்டுமே நடத்தப்பட்ட ஆய்வாகும். தெற்கு ஆசிய மக்களிடம் நீரிழிவு அதிக ஆபத்து ஏற்படுத்துவது போன்று உலக அளவில் நீரிழிவின் பண்புகள் வித்தியாசமாகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து பிரயாண தேவைகள் எதுவானாலும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

திரைத்துளிகள்



பிரித்தானியாவில் மிகவும் பிரபல்யமாகத் திகழ்ந்த நகைச்சுவை நடிகர் செர் கென் டொட் தனது 90ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் ஆறு வாரங்களாக சிகிச்சை பெற்றுவந்த டொட் அண்மையில் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியிருந்தார். இந்நிலையில் தனது வீட்டில் காலமாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. 1954ஆம் ஆண்டு முதல் நகைச்சுவை நடிகராக இருந்துவரும் இவரது சிறந்த படைப்பாக Diddy Men கருதப்படுகின்றது. மேலும் மூன்றரை மணித்தியாலங்களில் ஆயிரத்து 500 நகைச்சுவைக் கதைகளைக் கூறி 1960 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

*****



சென்னையில் நடைபெற்ற 'அபியும் அனுவும்' படத்தின் பத்திரிக் கையாளர் சந்திப்பில் பேசிய சுஹாசினி, மணிரத்னம் குறித்த ரகசியம் ஒன்றை வெளியிட்டார். சரிகம வழங்க யூட்லி பிலிம்ஸ் தயாரித்திருக்கும் படம் 'அபியும் அனுவும்'.

தமிழ், மலையாளத்தில் தயாராகி இருக்கும் இந்த படத்தில் டொவினோ தாமஸ், பியா பாஜ் பாய், பிரபு, சுஹாசினி, ரோகிணி ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

தரண் இசையமைத்திருக்கும் இதை பி.ஆர். விஜயலட்சுமி இயக்கியிருக்கிறார். இந்த படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பில் பேசிய படத்தின் நாயகன் டொவினோ தாமஸ்...

என்னு நிண்டே மொய்தீன் படத்துக்கு பிறகு தமிழ் படங்களில் நடிக்க நிறைய வாய்ப்புகள் வந்தன. நல்ல கதைக்காக நான் காத்திருந்தேன். அந்த நேரத்தில் தான் இயக்குனர் விஜயலட்சுமி மேடத்திடம் கதை கேட்டேன், சிறப்பான கதை. தமிழ் சினிமாவில் இது ஒரு சிறந்த படமாக இருக்கும். " என்றார்.

சுஹாசினி பேசும் போது, இயக்குனர் விஜிக்கும், எனக்கும் இருக்கும் உறவைப் பற்றி நிறைய பேசிக் கொண்டே போகலாம். யாருக்கும் தெரியாத இன்னொரு விஷயத்தையும் கூற வேண்டும். மணிரத்னம் யாரிடமும் உதவியாளராக வேலை செய்யவில்லை என்று தான் எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் விஜியின் அண்ணன் ரவி பந்துலுவின் கன்னட படத்தில் உதவி இயக்குனராக வேலை செய்திருக்கிறார். அதை இங்கு நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன். ரொம்ப நாள் கழித்து பிரபுவுடன் இணைந்து நடித்ததில் மகிழ்ச்சி" என்று கூறினார். நிகழ்ச்சியில் இயக்குனர் பி.ஆர். விஜயலட்சுமி, பியாபாஜ்பாய் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

*****



நடிகை தமன்னா தமிழ் சினிமாவில் பல முக்கிய படங்களில் நடித்து ரசிகர்களின் மனதை கவந்தவர். குறிப்பாக தர்மதுரை படத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் பிரபலமடைந்தார். இந் நிலையில் மீண்டும் சீனுராமசாமி இயக்கத் தில் உதயநிதியுடன் கண்ணே கலைமானே என்ற படத்தில் நடித்துள்ளார் தமன்னா, இப்படத்தில் மிகவும் அழுத்தமான வங்கி ஊழியராக நடித்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், "சீனுராமசாமி படத்தில் நடிப்பது மிகவும் இனிமையான அனுபவம், தர்மதுரை படத்தில் ஒரு அழுத்தமான கதாபாத்திரம் கொடுத்து என்னை தமிழ்நாடு முழுவதும் பிரபலமடைய செய்தார்.

அதே போல் இந்த கண்ணே கலைமானே படத்திலும் ஒரு அழுத்தமான கதாபாத்திரம் தான், சமீபத்தில் தான் என் காட்சிகள் கொடைக்கானலில் படமாக்கப்பட்டு முடிந்தது, உண்மையில் இந்த குழுவை பிரியவே மனசில்லாமல் பிரிந்தேன் என்று கூறியுள்ளார்

*****

தண்டனை கிடைக்காதென்ற...

வெறும் வாய்வார்த்தைகளால் பல்வேறு கொள்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் பங்காற்றி இருந்தும் அதே முற்போக்கிலேயே நடந்து கொள்கின்றனர்.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின் விளைவாலும் கடும் அரசியல் போக்கு கள் வளர்ந்து வருகின்றது என்று புரிந்துகொண்டமையாலும் அரசாங்கம் செயலிழந்து போகின்றது, அரசாங்கம் எழுந்து நின்று சரியானத்தைச் செய்ய வலுவில்லாது உள்ளது. நாங்கள் பெரும்பான்மையினரின் ஆதரவை இழக் கின்றோம் ஆகவே நாம் பின்னகர வேண்டுமென அரசாங்கம் நினைக்கின்றது.

இவ்வாறான மனப்பாங்கே அரசாங்கம் தற்போது கொண்டுள்ளது. இது இவ்வாறே செல்லுமாயின், மாற்றம் நேரப்போவதில்லை. பெரும்பான்மையினர் மத்தியில் கடும் அரசியற்போக்குடையவர்களின் தவறான செயல்களை ஊக்க மளிக்கும் வகையில் செயற்படவேண்டும் என்ற அடிப்படையான எண்ணம் மாற வேண்டும்.

அது மாறும்வரையில் நாட்டிலுள்ள ஏனைய சமூகத்தினர் சுயமரியாதையுடன் வாழ முடியாது நாங்கள் இந்நாட்டில் சமவுரிமையுள்ள பிரஜைகள் என கூற முடியாது எங்கள் உயிர்கள் பாதுகாப்பாக இருக்கும் என்னும் நம்பிக்கையை கொண்டிருக்க முடியாது. கொறடா இவ்விடயங்களை வெளிக் கொணர்ந்தார் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆயினும் அவர் எதிர்க்கட்சியை சார்ந்தவர்.

ஆனால் அவர் முன்வைத்த கருத் துகளை நான் மெச்சுகின்றேன். துரதிஷ்டவசமாக அத்தகைய முதுகெலும்பு இலங்கை அரசாங்கத்திடம் குறைவுபடுகின்றது. அது ஜனாதிபதியிடமோ பிரதமரிடமோ எந்தவொரு அமைச்சர்களிடமோ இல்லை. உங்களால் சரியானவற்றிக்காக எழுந்து நிற்க முடியாதெனில், உங்களால் நாட்டிலுள்ள எண்ணிக்கையில் குறைந்த சமூகத்தினருக்காக எழுந்து நிற்க முடியாதெனில், உங்களுக்கு இந்நாட்டை ஆளுவதற்கு உரிமை இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.


• Special • Special • Special • Special • Special • Special • Special • Special •
Montrealல் வழங்கும்
Neelam silk
நீலம் சில்க்
MAR 30, 31, APRIL 1
FRI, SAT, & SUN
EASTER HOLIDAY &
தமிழ்புத்தாண்டு மலிவு விற்பனை
MENS & LADIES SUITS FROM
$39.95
2018ம் ஆண்டிற்கான புதிய வரவுகள் நவீன டிசைன்கள்
சாறிகள் from $9.99 • சிறுமியர்களுக்கான சுரிதார் from $19.99,
ஆண்கள் Pant and Shirt Set $24.99
பான்சி நகைகள், மெத்தை விரிப்புகள்,
கம்பளிப் போர்வைகள், இப்படி பல எண்ணிலடங்கா தெரிவுகள் ஏராளம் ஏராளம்...
GANESHA PARTY HALL
300 Marcel Laurin
Ville St. Laurent, Quebec, H4M 2L4
(METRO, Du College, Bus#202)
உங்கள் பண்டிகைகளை குடும்பத்தினருடன்
கொண்டாடி மகிழ்ந்திட இன்றே நாடுங்கள் நீலம்சில்க்.
416-461-5555 • 514-747-9392
• Special • Special • Special • Special • Special • Special • Special • Special •